

# <u>ஸ்ரீரங்கநாத பாதுகாஸஹஸ்ரம்</u>

ஸ்ரீமதே லக்ஷ்மிந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அஸ்மத் குருப்யோ நம:

அஸ்மத் பரம குருப்யோ நம:



## <u>ப்ரபாவ பத்ததி</u>

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதாரக்கிக கேஸரீ

வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி

**<u>ச்லோகங்கள்:</u>**

**42: தத் விஷ்ணோ; பரமம் பதத்ர யுகளம் த்ரயந்த பர்யந்தகம்**

**சிந்தாதீத விபூதிகம் விதரது ச்ரேயோம்ஸி பூயாம்ஸி ந:**

**யத் விக்ராந்திதசா ஸமுத்தித பத ப்ரஸ்யந்தி பாதஸ்விநீ**

**ஸக்யேநேவ ஸதா நதஸ்ய தநுதே மௌளௌள ஸ்திதிம் சூலிந:**

**<u>பொருள்:</u>**

*தத் விஷ்ணோ: பரமம் பதம்* என்று உபநிஷத்துக்கள் பாதுகையின் மேன்மையைக் கூறுகின்றன. இப்படியாக உயர்ந்த ஜச்வர்யம் உடைய ஶ்ரீரங்கநாதனின் பாதுகைகள் நமக்கு உயர்ந்த நன்மைகளை ஏற்படுத்த வேண்டும்.

நம்பெருமாள் த்ரிவிக்ரமானாக நின்றபோது, அவன் திருவடிகளில் இருந்து பெருகிய கங்கையுடன் பாதுகை தொடர்புடையதாக ஆனது. அப்போதிலிருந்து கங்கை எவ்வாறு சிவனின் தலையில் எப்போதும் உள்ளதோ, அது போன்று பாதுகையும் சிவனின் தலையில் உள்ளது.



**<u>விளக்கம்:</u>**

சிவனின் தலையில் உள்ள இரண்டு பொருள்கள் குறித்துக் கூறினார். அவை கங்கையும் பாதுகையும் என்றார். இரண்டுமே எம்பெருமானின் திருவடிகளுடன் தொடர்பு கொண்டவையாகும். ஒன்று (கங்கை) த்ரிவிக்ரமனாக நம்பெருமாள் நின்றபோது அவனுடைய திருவடிகளில்

எப்போதும் இருப்பதால், அவன் திருவடிகளின் தொடர்பு பெற்றது.

**43: அம்புநி அம்புநிதே: அநந்யகதிபி: மீநை கியத் கம்யதே**


**க்லேசேநாபி கியத் வ்யலங்கி ரபஸ உத்துங்கை: ப்லவங்கேச்வரை:**

**விக்ஞாதா கியதீ புந: க்ஷிதிப்ருதா மந்தேந கம்பீரதா**

**கிம்தை கேசவ பாதுகாகுண மஹாம்போதே: தடஸ்தா வயம்**

**__பொருள்:__**

நீரைத் தவிர வேறு இடங்கள் உயிர் வாழ இயலாத மீன்கள் கூட கடலில் ஓரளவு மட்டுமே செல்ல இயலும். வேகத்தில் சிறந்தவர்களான அனுமான் முதலானவர்கள் கூட கடலில் ஓரளவு மட்டுமே தாண்டிச் செல்ல இயன்றது; அதற்கே மிகவும் சிரமப்பட வேண்டியிருந்து. திருப்பாற்கடலைக் கடைந்தபோது மந்தரமலை அந்த கடலின் ஆழத்தை ஓரளவு மட்டுமே கண்டது. அவற்றைப் பற்றி நமக்கு என்ன? நம்பெருமாளுடைய பாதுகைகளின் குணங்கள் பெரிய ஸமுத்திரம் போன்று உள்ளது. மற்றவற்றைப்போல் அல்லாமல் நாம் அதன் கரையிலேயே அல்லவா நின்று கொண்டிருக்கிறோம்?



**__விளக்கம்:__**

தங்களால் ஆழம் காண இயலாது என்று அறிந்த மீன்கள், எப்படியாவது கடலின் ஆழத்தைக் கண்டு பிடிக்கவேண்டும்

என்று வீண் முயற்சி செய்தபடி உள்ளன. அக்கடலின் நீள அகலங்களை அறியவேண்டும் என்று சிலர், தங்களை அனுமனாக எண்ணிக்கொண்டு வீண் முயற்சி செய்தபடி உள்ளனர். நாம் இது போன்று செய்யவேண்டாம். காரணம் நம்பெருமாளின் பாதுகைகளுக்கு உள்ள குணங்கள் ஸமுத்திரத்தை விட ஆழமானது என்று நாம் அறிவோம். அப்படி உள்ளபோது அவற்றை நாம் வர்ணித்துவிடுவோம் என்று ஏன் வீண் முயற்சி செய்யவேண்டும்?

**44: பதகமல ரஜோபி: வாஸிதே ரங்கபர்த்து:**

**பரிசத நிகமாந்தே பாதுகே தாரயந்த:**

**அவிதித பரிபாகம் சந்த்ரம் உத்தம்ஸயந்தே**

**பரிணத புவனம் தத் பத்மம் அத்யாஸதே வா**

**பொருள்:**

ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளில் உள்ள தூசுகளால் பாதுகை முழுவதும் தெளிக்கப்பட்ட நறுமணமானது வீசியபடி உள்ளது. மேலும் அந்த பாதுகைகள் உபநிஷத்துக்களை உடையதாகவும் உள்ளது. இப்படிப்பட்ட உயர்ந்த பாதுகைகளை தங்கள் தலையில் ஏற்று கொள்பவர்கள் நிலை என்ன? அவர்கள் வளர்வதையும் தேய்வதையும் இயல்பாக உடைய சந்திரனைத் தலையில் சூட்டிக் கொள்ளும் பதவியையோ அல்லது தாமரை மலரில் அமர்ந்து உலகைப் படைக்கும் பதவியையோ பெறுகிறார்கள்.

**விளக்கம்:**

இங்கு தலையில் சந்திரனைச் சூடும் பதவி என்பது சிவன் பட்டமாகும். தாமரையில் அமர்வது என்பது ப்ரம்ம பட்டமாகும். ஓர் ஐயம் ஏற்படலாம். பாதுகைகள் இவ்விதம் அற்பமான பலன்களான பதவிகளையும் அளிக்குமா?

இதற்கான காரணத்தையும் கூறுகிறார். நம்பெருமாளின் திருவடிகளில் உள்ளதால் பாதுகாதேவிக்கு ரஜஸ் உண்டாகி, இவ்விதம் செய்கிறாள் என்றார். ரஜஸ் என்றால் ரஜோ குணத்தையும் குறிக்கும், தூசிகளையும் குறிக்கும். இதனை ச்லேடையாகக் கூறுகிறார்....

*நா தைவம் தேசிகாத் பரம்*!!

*பாதுகாதேவி வருவாள்*....

*தாஸன் விஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாஸன்*.....

